காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 09 புதன்கிழமை 21.02.2024 கதிர் 106

### டெலிகொம், மின்சார சபை, விமான நிலையங்கள்

# எல்லாம் இந்தியாவுக்கு; எதுதான் மிஞ்சப் போகிறது இலங்கைக்கு?

### நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ஸ விளாசல்

டெலிகொம் நிறுவனம் இந்தியாவுக்கு, மின்சார சபையைப் பிரித்து அதுவும் இந்தியாவுக்கு, மன்னாரில் காற்றாலைகள் இந்தியாவுக்கு, விமான நிலையங்களும் இந்தியாவுக்கு, ஆள் அடையாள அட்டையை வழங்கும் பணியும் இந்தியாவுக்கு,பின்னர் எதுதான் இங்கு எஞ்சியிருக்கும்? இந்த நாடாளுமன்றமா? இவற்றுடன் 'எட்கா' ஒப்பந்தத்தினையும் செய்து கொண்டால் இலங்கை என்றுஒன்றுமேஇருக்காது. ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் பழைய தலைவர் மாவை சோ.சேனாதிராசாவே இப்போது கட்சியின் கட்டுப்பாட்டைத் தனது கைகளில் எடுத்துக்கொண்டுள்ளார். இருந்தாலும் புதிய தலைவரும் மனங்கோணாதபடி கருமங்களை நகர்த்தத்தான் விரும்புகின்றார் என்று காட்ட வேண்டியிருப்பதால் பெப்ரவரி 23 மத்திய செயற்குழுக் கூட்டத்தை அவர் கிளிநொச்சியில் கூட்டப் பணித்திருக்கிறார். அந்தக் கூட்டம் பழைய செயற்குழுவின் கூட்டமாக இருக்குமா அல்லது கட்சியின் முக்கியஸ்தர்கள் சும்மா கூடிப் பேசும் கூட்டமாக இருக்குமா என்பது இன்னும் கட்சிக்காரர்களுக்கே ☞2

## 5 சட்டங்கள் நடைமுறைக்கு

ஐந்து சட்டமூலங்கள் சான்றுரைப்படுத்தப்பட்டுள்ளதாக சபைக்கு பிரதி சபாநாயகா அஜித் ராஜபக்ச அறிவித்தார்.

அந்த அறிவிப்பில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி 'இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்), ஸ்ரீ லங்கா ☞8

## மத்திய வங்கி ஊழியர்களுக்கு மட்டும் எப்படி அதிகூடிய சம்பள அதிகரிப்பு?

### நாடாளுமன்றத்தில் கிரியெல்ல கேள்வி

மத்தியவங்கிஊழியர்களுக்கு மட்டும் எப்படி அதிகூடிய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட முடியும்? அதுவும் நாடாளுமன்றத்தின் அனுமதி இன்றி - என்று எதிர்க்கட்சிபிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கை பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட 9 சட்டமூலங்கள் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாடு வங்குராத்து நிலைக்குசெல்லும்போது இது தொடர்பாக மத்திய வங்கி ஆளுநரோ நிதி அமைச்சின் செயலாளரோ நாடாளுமன்றத்துக்குவெளிப்படுத்தவில்லை. அப்படி நாடு வங்குரோத்து அடைவதை வெளிப்படுத்தாமல் மறைத்த மத்திய வங்கி அதிகாரிகளுக்கு நூற்றுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பு ☞10

## வரவுள்ள மீன்பிடிச் சட்டத்தினால் மீனவருக்குப் பாதிப்பில்லையாம்

உத்தேச கடற்றொழில் சட்டத்தின் ஊடாக மீனவ மக்களின் உரிமைகள்பாதுகாக்கப்படுவதோடு அவர்களுக்கு எந்தப்பாதிப்பும்ஏற்படாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'திருத்தப்பட்ட புதிய கடற்றொழில் சட்டமூலத்தைநிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மீன்பிடித் தொழில் ☞11

## இலங்கை அமெ. பிராந்தியமல்ல இறையாண்மையுடைய தனி நாடு

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல சீற்றம்

இலங்கை அமெரிக்காவின் பிராந்தியமல்ல. இறையாண்மையுடைய சுயாதீனமான நாடான இலங்கைக்கு சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமையும் நாடாளுமன்றத்திற்கே காணப்படுகிதென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்த தெரிவிதத்தார்.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பில் கவலைவெளியிடுவதாக இலங்கைக்கு வருகை தந்துள்ளஅமெரிக்கபொது இராஜதந்திரத்திற்கான அமெரிக்க துணை இராஜாங்க செயலாளரான லிஸ் அலன் ஊடகப்பிரதானிகள்,ஊடகவியலாளர் மற்றும் சிவில்சமூகஅமைப்பினருடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று அரச தகவல் திணைக்களத்தில் ☞11

## ஓய்வூதிய முரண்பாடு எப்போது தீர்க்கப்படும்?

### எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

சம்பள முரண்பாடுகளோடு தற்போதும் ஓய்வூதியம்பெறும்2016 -2020 ஆம் ஆண்டுக் கிடைப்பட்ட 112,000 ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுமுரண்பாடுகள் எப்போது தீர்க்கப்படும்? என எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27(2) இன்கீழ் அவர்இந்தக்கேள்வியை எழுப்பினார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

சம்பள முரண்பாடுகளோடு தற்போதும் ஓய்வூதியம் பெற்றுவரும் 2016- 2020 ஆம் ஆண்டுக் கிடைப்பட்ட ஓய்வூதியம் பெறும் 112,000 ☞8

## அமைச்சர் வக்கும்புரவுக்கு மேலதிகமாக ஓர் அமைச்சு

மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராக சாணக்க வக்கும்புர மற்றும் சுற்றாடல் துறை இராஜாங்க அமைச்சராகவும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவால் நியமிக்கப்பட்டார். அவர் நேற்றுஜனாதிபதிமுன்னிலையில்தனதுபதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவர் இதற்கு முன்பாகவகித்தமாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் நியமனத்திற்கு மேலதிகமாக இந்தப் புதிய நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர்சமன்ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

## நுண்நிதி கடன் சட்டம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பும் சபாநாயகரிடம்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை' எனும்சட்டமூலம்தொடர்பாகஉயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாகப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சபாநாயகர் அறிவிப்பு நேரத்தில் அவர் வெளியிட்ட அறிப்பில், சட்டமூலத்தின் அரசமைப்பு ரீதியான செல்லுபடியாகும் தன்மை பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பின்வரும்விடயங்களை உள்ளடக்குகின்றன

5(3)(ஆ), 3(இ) ஆம் வாசகங்களுடன்வாசிக்க வேண்டிய 20(3)(ஐ), 70 ஆம் வாசகத்துடன் வாசிக்கவேண்டிய ☞8

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தினை நிறைவேற்ற மக்கள் கருத்துக் கணிப்பு

### அவசியம் என்கிறது உயர நீதிமன்றம்; சபாநாயகருக்கு அறிவிப்பு

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கௌரவ சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்புநேரத்தில்அவர் இதனைத் தெரிவித்தார். குறித்த சட்டமூலத்தின் அரசமைப்பு ரீதியான செல்லுபடியாகும்தன்மை பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பின்வருமாறாகும்:-

3, 42, 53 மற்றும் 70 ஆம் வாசகங்கள் அரசமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன், நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில்உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்மூலம்முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அவ் இணங்காமை நீங்கும்.

4 ஆம் வாசகம் உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் திருத்தப்படுதல் வேண்டும்.

72(1) ஆம் வாசகம் அரசமைப்புடன் இணங்காததுடன்விசேட பெரும்பான்மையுடனும் மற்றும்மக்கள் ஆணையின்போது மக்களினால் அங்கிகரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாசகங்கள்தொடர்பில்உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.அதற்குஇணங்க, 72(2) ஆம் வாசகமும் உயர்நீதிமன் ☞2

## இந்திய துணை தூதரக முற்றுகை இடை நடுவில் தடுத்து நிறுத்தம்



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தைமுற்கையிடச் சென்ற யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் பொலிஸாரால் இடையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். பிரதிநிதிகள் சிலர் மட்டுமே இந்திய துணைத் தூதுவரைச் சந்தித்து மனுக் கொடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு நல்லூர், மருதடி வீதி சந்தியில் இருந்து ☞10

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தெளிவில்லை.

இதற்கிடையில் மாவையரின் கட்டுப்பாட்டில் கட்சி மீண்டும் வந்ததுமே கட்சியின் பரவணிப் பழக்கம் மீண்டும் தலைதூக்கத் தொடங்கிவிட்டது. கட்சிக்கு எதிராகத் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கட்சியும் அதன் தலைவர்களும் கேட்டுக்கொண்டால் தானே முன்னின்று வழக்காடுவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்தை "பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் செயல்" என்று கிண்டலடித்திருக்கிறார் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி தவராசா.

ஊடகங்களிற்கு இது விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், இந்த வழக்குகளைப் போடவைத்தவர் சுமந்திரனே என்கிற சாரப்படவே இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அவர் மட்டுமல்லர், கட்சிக்குள் சிறீதரனை ஆதரித்து சுமந்திரனை எதிர்த்தவர்கள்கூட சமூகஊடங்களில் மீண்டும் கட்சி மானத்தை அரங்கேற்றக்கூடிய வகையில் தொடர்ந்து அளவுக்கதிகமாகவே பேசுகின்றார்கள்.

சட்டத்தரணி தவராசா, இந்த வழக்குகளில் கட்சிக்காகவோ மற்றவர்களுக்காகவோ சுமந்திரனால் முன்னிலையாக முடியாது என்கிற சட்ட வாதத்தை முன்வைத்துள்ளார். யாழ்ப்பாண வழக்கில் வழக்காளிகளால் அணைக்கப்பட்டுள்ள ஆதாரங்களில் ஒன்று, பொதுக் குழுக் கூ-ட்டம் தொடர்பில் சுமந்திரன் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கை. அதனால் அந்த வழக்கில் சுமந்திரனும் ஒரு சாட்சியாக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால் அவரால் ஏனைய எதிராளிகளுக்காகநீதிமன்றில்வாதாட முடியாது என்றும் அதேபோன்று திருகோணமலையிலும் அவரும் ஒரு எதிராளியாகக் குறிப்பிடப் பட்டிருப்பதால் அந்த வழக்கிலும் அவர் ஏனையவர்களுக்காக முன்னிலையாக முடியாது என்றும் ஒரு சட்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

அவர்சொல்வதுசரியானதாகவும் இருக்கக்கூடும். ஆனால் அவர் அதனுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. சுமந்திரனின் கருத்து சட்ட நுணுக்கமற்ற சிறுபிள்ளைத்தனமானது என்றும், பிரதான விடயத்தை திசை திருப்புவதற்காகத்தான் சுமந்திரன் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்என்றும்அவர் தமிழ்அரசுக்கட்சியைப்பாதுகாப்பேன் என்பது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதைப் போன்றது என்றும் விமர்சித்திருக்கிறார்.

கட்சியின் சட்டத்துறைச் உப செயலாளர்என்றுநியமிக்கப்பட்டவர் சட்டத்தரணி தவராசாதான். அவேரதான் இந்த விடயத்தில் கட்சிக்காக வாதாடுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதுபோன்ற வழக்குகளில் அவரது மனைவியான கௌரியே மிகவும் திறமையானவர் என்றும் அவர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி போன்றவற்றின் உட்கட்சி வழக்குகள் பலவற்றில் திறம்பட வாதாடியவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் கௌரி மறைந்துவிட்ட காரணத்தினால், கட்சி இந்த வழக்குகளுக்காக மூத்த முஸ்லிம் சட்டத்தரணிஒருவரையேஅழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெ0கின்றது.

ஆக மொத்தத்தில் இந்த விவகாரம்நீதிமன்றத்திற்குவெளியே தீர்க்கப்படப்போவதில்லை என்பது உறுதியாகின்றது. நீதிமன்றமாகப் பார்த்து வழிகாட்டினாலன்றி கட்சிக்குள்ஒரேயொருதலைவர்கூட இல்லை இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்திக்கு வெளியே இணக்கமாகப்பேசித் தீர்வு காண்பதற்கு. இந்த லட்சணத்தில்தான் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் கொழும்பு ஆட்சியாளர்களுடன் பேசி தமிழர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்று நம்பி ஒவ்வொரு தேர்தலிலும் தமிழர்கள் வாக்களிக்கிறார்கள்.

கடவுளே நினைத்தாலும் தமிழர்களைக் காப்பற்ற முடியுமா என்று தெரியவில்லையே.....

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## எல்லாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் இறைமையை மீட்டதாகக் கூறும் ராஜபக்ச வீரர்கள் இந்தக் காட்டிக்கொடுப்புக்குவெட்கமில்லாது துணைபோகின்றார்கள்.

இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

69 இலட்சம் மக்களின் ஆணையால் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த மொட்டுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றார்கள். சிங்கங்களாக தம்மை உருவகித்த பிரதமர் தினேஷ் குணவர்த்த உள்ளிட்டவர்கள்பூனைக்குட்டிகளாக தங்களை உருவகிக்கின்றார்கள். இறைமையைஇழக்கும்குற்றத்துக்கு ராஜபக்சக்கள்அனைவரும்துணை புரிகின்றார்கள்.

டெலிக்கொம் நிறுவனத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கவுள்ளனர். மின்சார சபையையும் துண்டுகளாகப் பிரித்து இந்திய நிறுவனத்துக்கு வழங்கவுள்ளனர். மன்னாரில்காற்றாலைமின்உற்பத்தி நிறுவனத்தின் அதிகாரத்தினை அதானிக்கு வழங்குகின்றனர்.

எமது மூன்று விமான நிலையங்களை இந்தியாவுக்கு வழங்குவதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவே கூறுகின்றார் அல்லவா. அப்படியாயின் இறுதியில் எது எஞ்சியிருக்கும். இறுதில் இந்தப் நாடாளுமன்றமா எஞ்சியிருக்கும்? அதனையும் வழங்கி விடுங்கள். அவ்வாறுவழங்கிவிட்டால்எதுவுமே எஞ்சியிருக்காது.

எட்டகா உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளீர்கள். அந்த உடன்படிக்கையை அமைச்சரவை அங்கத்தவர்கள்கூடக் காணவில்லை. அதற்கென தனியானதொருஅலுவலகம்அமைக்கப்பட்டு செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரைக் காண்பதற்காகச் சென்ற தொழில் வல்லுநர்கள் குழுவுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. அவருடைய பதில் இந்தியா இம்முறை முன்னாயர்த்தமாக உள்ளது என்பதே .

தற்போது எமது அடையாள அட்டையை இந்தியாவே வழங்கவுள்ளது. இதன் மூலம் இந்தியா தரவுக்கட்டமைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளது. அதேபோன்று மில்கோ நிறுவனத்தினை அமுலுக்கு வழங்கவுள்ளார்கள். அதன் பின்னர் எட்கா ஒப்பந்தத்தினையும் செய்து கொண்டால் இலங்கை என்று ஒன்றுமே இருக்காது. இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலை அனுமதித்து அதனைப் பார்த்துக்கொண்டிருப்பதா மொட்டுக் கட்சியினரின் கடமை. நாட்டின் இறைமையை மீட்டதாகக் கூறும் ராஜபக்ச வீரர்கள் இந்தக் காட்டிக் கொடுப்புக்கு வெட்கமில்லாது துணைபோகின்றார்கள். அவர்களுடைய நாய்க்குட்டிகள் மௌனமாக இருக்கின்றார்கள்.

குறைந்ததுஅமைச்சர்ஹரீனின் கூற்றான இந்தியாவின் பகுதியாக இலங்கை என்பது பாரதூரமானது என்றுகூறுவதற்குகூடஅவர்களுக்கு முதுகெலும்புஇல்லையா?-என்றார்

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தின் தீர்ப்புக்கு இணங்க திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

75(3) ஆம் வாசகம் அரசியல

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இந்திய சுற்றுலாவிகளைக் கவர கடல் போக்குவரத்து ஊக்குவிப்பு

### கட்டணங்களை குறைக்கவும் அமைச்சரவை முடிவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் வழிப் பயணிகள் போக்குவரத்தை ஊக்குவித்தல் தொடர்பாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடல்வழிப்பயணிகள் போக்குவரத்தை ஊக்குவிப்பதன் மூலம் இரு நாடுகளுக்கிடையில் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர்ந்து சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல், மேம்படுத்தப்பட்ட தொடர்புகள் மூலம் கலாச்சார பரிமாற்றங்கள், கல்வி, சமய, கலாச்சார செயற்பாடுகள், கலை, விளையாட்டு போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்களை ஊக்குவிப்பதற்கு இயலுமை உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்காக குறைந்த செலவிலான சுற்றுலா மற்றும் போக்குவரத்துக் கட்டண முறையொன்றை அறிமுகப் படுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய பயணிகள் போக்குவரத்துப் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து தற்போது அறிவிடப்படும் வெளிச்செல்லல் வரி முறையே 5 அமெரிக்க டொலர்கள் மற்றும் 20 அமெரிக்க டொலர்களாகக் குறைப்பதற்கும், படகுப் பயணி ஒருவருக்கு 60 கிலோ கிராம் வரையான பயணப் பொதிக் கட்டணத்தை இலவசமாக வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பாரப்படுத்துங்கள்

### ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரிடம் வலியுறுத்து

ஐ.நா. அதிகாரிகளின் முன்மொழிவுகளுக்கு அமைவாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டரக்கிடம் வலியுறுத்தியுள்ளனர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

ஆறம்சக்கோரிக்கையைமுன்வைத்துவடக்கு,கிழக்கு மாகாணங்களின்வலிந்துகாணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் எழுதியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இதனைத வலியுறுத்தியுள்ளனர். கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் எழுதிய அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொக்குத்தொடுவாய் உட்பட, தமிழர் தாயகம் எங்கும் காணப்படும் மனிதப்புதைகுழு அகழ்வுப்பணி, எச்சங்கள் பாதுகாப்பு, விசாரணை என்பன ஐ.நா அல்லது சர்வதேசத்தின் மேற்பார்வையுடன் நடைபெற்று உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும்.

எமது உறவுகள் சரணடைந்த, கையளிக்கப்பட்ட காவலரண்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மற்றும் அந்த நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டு எமது உறவுகளின் நிலை அறியப்படுவதோடு அதற்குக் காரணமானவர்கள் சர்வதேச சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

உள்ளகப் பொறிமுறைகளை முற்றுமுழுதாக நாம் நிராகரித்துள்ள நிலையில் எமது பங்களிப்புபின்றி வேறு பொறிமுறைகளைக் கொண்டுவர முயற்சித்து மேலும் காலத்தை இழுத்தடிக்க வேண்டாம் என்பதை மன்றாட்டமாக அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகின்றோம். ஏற்கனவே பதினைந்து ஆண்டுகள் கடத்தப்பட்டு விட்டது என்பதை மிகவும் மனவேதனையுடன் ஞாபகப்படுத்துகின்றோம்.

ஐ.நா. அதிகாரிகளின் முன்மொழிவுகளுக்கு அமைவாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2009இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை, ஐ.நா உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக்குழந்தைகள்சிறுவர்கள்உட்படஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து 14ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இவ்வினவழிப்பினையும் போர்க்குற்றங்களையும் நடத்திய ஒரு பாதுகாப்பு படை அதிகாரிகளோ அல்லது அரசியல்தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஆணையர் உட்பட பல ஐ.நா. அதிகாரிகள் பரிந்துரைத்தது போல இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது உறவுகள் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்கும், காரணமான ஆக்கிரமிப்பு இலங்கை இராணுவம் எமது தாயகத்தில் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ளது. இந்த இராணுவத்தின் பிரசன்னம் எம்மை தொடர்ச்சியாக பீதி நிலையிலேயே வைத்துள்ளது. இந்த ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாயகத்திலிருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத்தின் அனுரசணையுடன் அரச இயந்திரங்களான தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப்பாதுகாப்பு திணைக்களம், நிலவள திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை இலங்கைஅரசானது முனைப்போடுநடைமுறைப்படுத்தி வருகிறது.

வட, கிழக்கில் உள்ள சுமார் 200இற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும் அமைக்கப்படுவத்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாகநிறுத்தப்பட்டுகாணிகள்உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட வேண்டும்.

இந்த தீவில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வின்றி தொடர்கதையாகவே உள்ளது. இனவழிப்பும், இனவன்முறையும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. தமிழ் மக்களை இனவழிப்பிலிருந்து பாதுகாக்கவும், மீள நிகழாமையை உறுதி செய்யவும் நிரந்தர அரசியல் தீர்வு அவசியம். தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும் சர்வதேசத்தினால் நடாத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் தெரிவு அறியப்பட வேண்டும். இதில் சர்வதேசத்தில்அங்கீகரிக்கப்பட்டஇனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# 55 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்டுகள் பிராண்டிக்ஸ் நிறுவனத்தால் அன்பளிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 55 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்டு வழங்கி வைக்கப்பட்டது.

பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்டு வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (05)

## இலங்கை சாரணர் சங்க 10 ஆவது ஜம்போறியல் யாழ். மாவட்டத்தில் 11 பாடசாலைகள் பங்கேற்பு










இலங்கை சாரணர் சங்கத்தின் 10 ஆவது ஜம்போறி மாநாடு திருகோணமலையில் 20 ஆம் திகதி ஆரம்பித்து 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் யாழ். மாவட்டத்திலிருந்து 11 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 253 சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சாரணர்களை கௌரவித்து அனுப்பிவைக்கும் நிகழ்வு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் திங்கட்கிழமை பிற்பகல் யாழ். பழைய பூங்காவில் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வின் போது யாழ். மாவட்ட சாரணர் கொடிக்கான சாரணர் அணிவகுப்பு இடம்பெற்றதுடன், சாரணர்களுக்கான சீருடைகள் மற்றும் ஜம்போறியில் பங்குபற்றும் சாரணர்களுக்குத் தேவையான உணவுப்பொருள் என்பன ஆளுநர் அவர்களால் வழங்கி வைக்கப்ட்டன.

நிகழ்வில் உரையாற்றிய கௌரவ வட மாகாண ஆளுநர், திருகோணமலைக்குப் புறப்படும் சாரணர் சிறார்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், சாரணர் இயக்கத்திற்காக தங்களை அர்ப்பணித்துள்ள பாடசாலைகளையும் பாராட்டினார்.

நிகழ்வின் போது சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர் எம். நத்தகோபாலன் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

## பிரதேச செயலகப் பணியாளர்களுக்கு சம்மாந்துறையில் ரீ– சேர்ட் அறிமுகம்



(சர்ஜ/ன் லாபீர், எல்.எம் நாஸீம்)

சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்னோம்பல் அமைப்பால் புதிய டீ சேர்ட் அறிமுகம் செய்யும் நிகழ்வு திங்கட்கிழமை பிரதேச செயலக நலன்னோம்பல் அமைப்பின் தலைவரும், பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் பிரதேச செயலக முன்றிலில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய டி சேர்ட்டினை அறிமுகம் செய்து வைத்தார். மேலும் இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், கணக்காளர் ஐ.எம் பாரிஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம்,நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல்,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், நலன்னோம்பல் அமைப்பின் செயலாளர் எம்.எஸ்.ஏ அன்வர்,பொருளாளர் ஏ.எம் நவாஸ் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர.(05)

## போதைப்பொருளை நுகர தயாராகவிருந்த 4 இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்வதற்கு தயார் நிலையில் இருந்த நான்கு இளைஞர்களை பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

கோண்டாவில் - இருபாலை வீதியில் உள்ள இரகசிய இடமொன்றை இளைஞர்கள் போதைப்பொருள் நுகர்வுக்கு பயன்படுத்துவதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு பொலிஸார் விரைந்து சென்றனர்.

அங்கு நான்கு இளைஞர்கள் போதைப்பொருளை நுகர்வதற்குத் தயாராக போதைப்பொருள்களுடன் காணப்பட்ட நிலையில் அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் , ஊசியும் (சிறிஞ்) மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், குருநகர் பகுதியை சேர்ந்தவரிடம் இருந்து தான் இந்த போதைப்பொருள்களைக் கொள்வனவு செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருளை விற்பனை செய்தவரை அடையாளம் கண்டுள்ள பொலிஸார் அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## சிதைந்த நிலையில் பெண்ணின் சடலம்

அஹுங்கல்ல, எகொடமுல்ல பிரதேசத்தில் வீடொன்றில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் .

உயிரிழந்த பெண்ணை பல நாள்களாகக் காணவில்லை என பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது .

அதன்படி, திங்கட்கிழமை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, அந்த பெண் வீட்டிலுள்ள நாற்காலியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது உடல் சிதைந்த நிலையில் துர்நாற்றம் வீசியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், பலபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர.(05)

## இராணுவத்தின் யாழ் . தளபதி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸுக்கும் யாழ் பிராந்திய பாதுகாப்புப்படைத் தலைமையகக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று திங்கட்கிழமை முற்பகல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பிராந்தியத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை உரிய வகையில் முன்னெடுத்து செல்லல், பொது மக்களின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகளின் போது தேவையான பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள குடியேற்றப்பட்டவர்களுக்காக பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியாவது நீக்குங்கள்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் உள்ள பல இடங்கள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானவை என்பதை உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் அதிலுள்ள பலவற்றை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவும் சிலவற்றை நிறைவேற்ற மேலதிகமாக மக்களின் கருத்துக்கணிப்பும் அவசியம் என்றும் உயர் நீதிமன்றம் வழிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்திற்கும் நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் கடுமையான எதிர்ப்பு இருக்கின்றது. போர்க் காலத்திலும் போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டு காலத்திலும் இந்தச் சட்டம் தமிழர்களுக்கு எதிராக முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த அனுபவங்களின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையும் அமெரிக்கா, பிரட்டன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளும் நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றன. நாட்டிற்குள் தமிழர்களும் சிங்களவர்களில் ஒரு பகுதியினரும் கூட அந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள்.

அவற்றின் விளைவாகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆளும் தரப்புக் கொண்டு வந்தது. ஆனால் பழைய சட்டத்தையும்விட ஒருபடி மேலே போய் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலமும் நீக்கப்படவேண்டும் என்று தொடர்ச்சியாக எதிர்ப்புக்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும் இந்த விடயத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ள பல விடயங்களை ஆளும் தரப்புக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவே இல்லை என்பது வேதனை.

பொதுமக்களைத் துன்புறுத்தி முறைகேட்டுக்கு உள்ளாக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும் வழங்கும் இத்தகைய சட்டங்கள் கடந்த காலங்களில் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் அது இனவாத நோக்கத்துடனேயே பயன்படுத்தப்பட்டது என்பதும் நிரூபனமாகியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றி பல பத்து வருடங்கள் வரை சிறையில் வாடியவர்களின் சோகக் கதைகள் பலவுண்டு. இன்னும்கூட விடுவிக்கப்படாமலேயே சிறையில் இருக்கும் கைதிகள் இருக்கின்றனர்.

அரசுக்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பையும் போராட்டங்களையும் அடக்கி ஒடுக்குவதற்கான வரம்புமீறிய அதிகாரங்களை அரசுத் தலைவருக்கு வழங்கும் இத்தகைய சட்டங்கள் தலைவர்களைச் சர்வாதிகாரிகளாக்குவதற்கே துணை நிற்கின்றன. எனவே இதுபோன்ற சட்டங்களை முற்றிலுமாக நீக்கிவிட்டு சாதாரண சட்டங்களின் கீழ் இத்தகைய வழக்குகளைக் கையாள்வதற்கான திறமையைக் காவல்துறையினரிம் ஏற்படுத்தவேண்டும். அதுவே காலத்தின் தேவை. எதிர்ப்புக்களை உதறிவிட்டு தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதை விடுத்து, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை இந்தச் சந்தர்ப்பத்திலாவது முற்றிலுமாகக் கைவிடுவதற்கு ஆளும் தரப்பினர் முன்வரவேண்டும்.

# உயரடுக்கு சிங்கள அரசியல்

உபுல் யோசப் பெர்னான்டோ





முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும் முன்னாள் பிரதமர் சிறீமாவோவுக்கும் இடையிலான அரசியல் பகைமை, அதற்கு முன்னரோ பின்னரோ இருந்த எந்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இருந்ததைவிடவும் விஞ்சியது. 1970 - -1977 ஐக்கிய மக்கள் முன்னணி ஆட்சிக் காலத்தில் 1971 கிளர்ச்சியையொட்டி பிரதமர் சிறீமாவோ எந்தவித முறையான குற்றச்சாட்டுகளும்



இன்றி ஜே.ஆரின் ஒரே மகனைக் கைது செய்யும் அளவிற்குச் சென்றார். மேலும், ஜே.ஆர் தனது மனைவியுடன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தபோது அந்நியச் செலாவணி குற்றச்சாட்டுகளின் கீழ் அவரைத் தடுத்து வைக்க முயன்றார். ஜே.ஆர், இந்த நடவடிக்கைகளை மனதில் தேக்கி வைத்திருந்தார். தான் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் பழிவாங்கத் தொடங்கினார். அவர் சிறீமாவோவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கினார். இறுதியில் அவரது குடியுரிமை உரிமைகள் பறிக்கப்பட்டது.

இரண்டு நபர்களும் அரசியல் உயரடுக்கின் உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்கள். சிறிமாவோ ஒரு பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர், அதேசமயம் ஜே.ஆர் கொழும்பில் உள்ள மதிப்பிற்குரிய குருந்துவத்தை குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த இரண்டு நபர்களுக்கிடையிலான நீண்டகால விரோதம் இறுதியாக 1988இல் தீர்க்கப்பட்டது. அடுத்து வரவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸவே வெற்றி பெறுவார் என்பதற்கான வலுவான அறிகுறிகள் தெரியத் தொடங்கியதும், அதாவது சமூகத்தின் உயரடுக்கு அல்லாத பின்னணியில் இருந்து ஒருவர் வெல்ல முடியும் என்ற தோற்றப்பாடு ஏற்பட்டபோது இருவருக்கும் இடையிலான பிணக்கு முடிந்து, இணக்கம் ஏற்பட்டது.

1988 ஜனாதிபதித் தேர்தல் வரவிருந்த நிலையில், காபந்து ஆட்சியை நிறுவும் நோக்கில் ஜே.ஆரும் அனுராவும் பேச்சுக்களில் ஈடுபட்டனர். சிறீமாவோவின் கூட்டங்களில் ஜே.வி.பியின் அச்சுறுத்தல் அதிகரித்ததைத் தொடர்ந்து தயக்கத்துடன்தான் என்றாலும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் இந்த விவாதங்களுக்குள் நுழைந்தது. தொடக்கத்தில், பிரேமதாசவின் ஐ.தே.க. ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட அச்சுறுத்தலைக்கூட விஞ்சி, ஜே.வி.பியின் பயங்கரவாதம் தமது வாக்காளர் தளத்திற்கு ஏற்படுத்தக்கூடிய தீங்குகளை அடையாளம் காண ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சிறிது காலம் பிடித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது வாக்காளர் தளத்தில் ஜே.வி.பி. ஏற்படுத்திய சேதத்தின் அளவை பின்னர்தான் புரிந்துகொண்டது.

பிரேமதாசவை கூட்டங்களை நடத்தவிடாமல் ஜே.வி.பி.யின் பரப்புரை செய்தபோதிலும், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கிழக்கு முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியில் ஐ.தே.கவின் ஆதரவை சீர்குலைக்க ஜேவிபி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. ஜே.ஆர் மற்றும் அனுரவின் பேச்சுக்களின் நோக்கம் காபந்து ஆட்சியை நிறுவுவதும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குச் சாதகமான சூழலை வளர்ப்பதும் ஆகும்.

பிரேமதாசவின் ஜனாதிபதியாகும் விருப்பத்துக்கு சாவு மணி அடிப்பதே இந்த விவாதங்களின் பின்னணியில் இருந்த அடிப்படை நோக்கம். இந்தப் பேச்சுக்களால் விரக்தியடைந்த பிரேமதாசா திகைத்துப் போனார். பொரளையில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, வார்ட் பிளேஸில் உள்ள ஜே.ஆரின் இல்லத்திற்குச் சென்ற அவர், அங்கு ஜனாதிபதி தேர்தலில் இருந்து தான் விலகுவார் என்று தெரிவித்தார். கட்சியின் ஆதரவு பிரேமதாசாவுக்குப் பின்னால் உறுதியாக இருந்த நேரத்தில் இந்த அறிவிப்பு வந்தது. விளைவுகளைப் பற்றி பயந்த ஜே.ஆர், திடீரென பேச்சை நிறுத்தினார்.

அப்போது ஜே.ஆருக்கும் அனுரவுக்கும் சிறீமாவோவுக்கும் இரண்டு இலக்குகள் இருந்தன. பிரேமதாசவை ஜனாதிபதி ஆவதைத் தடுப்பதே முதல் இலக்கு. இரண்டாவது இலக்கு, ஜே.வி.பியை ஒடுக்குவதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்தை எட்டுவது.

பிரேமதாசவைப் போலவே விஜேவீரவும் ஒரு தேர்ந்த தலைவர். பிரேமதாசாவின் வெற்றியையோ அல்லது விஜேவீர நாட்டைக் கைப்பற்றுவதையோ இலங்கையின் உயரடுக்கு அரசியல் வர்க்கத்தால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. அந்த அரசியல் நிலைமை காணப்பட்டது 1988 ஆம் ஆண்டு. சரியாக 36 வருடங்களுக்குப் பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இரண்டு உயர் சாதியினர் அல்லாத அரசியல் தலைவர்கள் ஜனாதிபதிப் போரில் இணைந்துள்ளனர். ஒருவர் ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச. மற்றையவர் தம்புத்தேகம கிராமத்தில் உள்ள பாடசாலையிலிருந்து வந்த ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க. இந்த இருவரில் யாரேனும் ஒருவர் ஜனாதிபதி ஆவதை மேல்தட்டு வர்க்கம் பொறுத்துக்கொள்ளாது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், சஜித் அல்லது அநுரவுக்கு ஜனாதிபதி கதிரை செல்வதை தடுப்பதற்காக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

இந்த உயரடுக்கு மனநிலை மிக மோசமானது. 1988 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானதும், தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு வந்த சிறீமாவோ, முடிவுகளை இடைநிறுத்த வேண்டும் என்று தெரிவித்து, ஆணையாளர் அலுவலகத்தின் நாற்காலியை எட்டி உதைத்தார். தனது காலத்திலேயே பிரேமதாசவால் ஜே.ஆர். தோற்கடிக்கப்பட்டதை அந்தப் பெண்மணியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

பிரேமதாச வெற்றிபெற்று ஜே.வி.பிக்கு மூன்று அமைச்சர்களை வழங்கியதும், கூட்டரசாங்கம் அமைப்பது குறித்தும் பேசியபோது, மேல்தட்டு வர்க்கம் மீண்டும் செயற்பட்டது. பிரேமதாசவின் ஆட்சியில் இருந்த இரண்டு சக்திவாய்ந்த அமைச்சர்களான பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மற்றும் ஜே.ஆரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து பிரேமதாச ஜே.வி.பியை அடக்கும் நிலைக்குத் தள்ளினார்கள்.

1983க்குப் பிறகு இலங்கை அரசியலில் மூன்று தேர்ந்த தலைவர்கள் உருவானார்கள். அவர்கள் ரணசிங்க பிரேமதாச, ரோஹன விஜேவீர மற்றும் விஜய குமாரதுங்க. இந்த மூன்று தேர்ந்த தலைவர்களும் மேல்தட்டு வர்க்கத்திற்கு பெரும் தலைவலியாக இருந்தனர். மூன்று உயரடுக்கு தலைவர்களும் எழுச்சி பெற்று வந்த மூன்று இளம் தலைவர்களையும் கொல்லும் போரைத் தொடங்கினர். (9ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalāikkathir

# தென்கிழக்கு பல்கலை இஸ்லாம் கற்கை திணைக்களத்துக்குப் புதிய தலைவர்!

நூருல் ஹுதா உமர்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக அரபுமொழி மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத்துக்கு புதிய திணைக்களத் தலைவராக நேற்று(செவ்வாய்க்கிழமை)முதல் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நியமித்துள்ளார்.

கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸ் இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத்தின் தலைவர் பொறுப்புக்களை கையேற்கும் நிகழ்வு, அரபு மொழி மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.





இந்நிகழ்வின் போது பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ் நியமனக்கடிதத்தை கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸிடம் ஒப்படைத்தார். அதேவேளை குறித்த திணைக்களத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஆர்.ஏ. சர்ஜுன் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்களைப் புதிய தலைவர் கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸிடம் கையளித்தார்.

நிகழ்வில் அரபுமொழி திணைக்களத்தின் தலைவர் எம்.சி.எஸ். சாதீபா உள்ளிட்டவர்களுடன் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்களும் பீடத்தின் உதவி பதிவாளர் எஸ். பிரசாந்த் ஆகியோரும் பங்கு கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பீடாதிபதி முனாஸ், பீடத்தின் செயற்பாடுகளில் புதிய கலாசாரங்களைக் கொண்டுவரவேண்டும் என்றும் அதன் ஒருகட்டமாகவே திணைக்கள தலைவர் தனது பொறுப்புக்களைக் கையேற்ற நிகழ்வு என்றும், இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்திலும் தொடரப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேற்படி திணைக்களத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஆர்.ஏ. சர்ஜுன் திணைக்களத்துக்கும் பீடத்துக்கும் ஆற்றிய பணிகள் பற்றி பாராட்டிப் பேசிய பீடாதிபதி, பேராசிரியர் சர்ஜுன் விட்ட இடத்திலிருந்து கலாநிதி முகம்மட் நபீஸ் தனது பணிகளைத் தொடர்வார் என்றும் அவருக்கு உள்ள பல்வேறு தொடர்புகளை வைத்து திணைக்களத்துக்கும் பீடத்துக்கும் தன்னால் முடிந்த அத்தனையையும் செய்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் பேராசிரியர் ஆர்.ஏ. சர்ஜுன், அரபுமொழி திணைக்களத்தின் தலைவர் எம்.சி.எஸ். சாதீபா ஆகியோரும் உரையாற்றியதுடன் பீடத்தின் உதவி பதிவாளர் எஸ். பிரசாந்த் நன்றியுரை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# கோப்பாயில் பெண் மீது வாள் வெட்டு சந்தேகநபர்கள் உடனடியாகக் கைது

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் பெண்ணொருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில், பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் மீது திங்கட்கிழமை வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பெண்ணை அயலவர்கள் மீட்டு, சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளது. (05)

# விளக்கமறியல் கைதியைப் பார்வையிடச் சென்ற நபரின் சொக்லெட் பொதிக்குள் புகையிலை துண்டுகள் சிக்கின!



கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரை பார்ப்பதற்காகச் சென்ற ஒருவர், தான் கொண்டு வந்த சொக்லெட் பிஸ்கட் பொதிக்குள் மிகச் சூட்சுமமான முறையில் புகையிலை துண்டுகளை மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார் என சிறைச்சாலை ஆணையாளர் (ஊடகப் பேச்சாளர்) காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் கொண்டு வந்த பொதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டபோதே இவை கண்டு பிடிக்கப்பட்டு சந்தேக நபரை பொரளை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை நிர்வாகமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir



# சர்வதேச சமூக நீதி தினத்தில் நுவரெலியாவில் போராட்டம்!

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 20 திகதி 'உலக சமூக நீதி தினமாக' அனுசரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழர்களின் உரிமைகளை உள்ளடக்கிய சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (செவ்வாய்கிழமை) நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக கண்டனப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் ஒன்றியம், சமூக அபிவிருத்தி மன்றங்களின் ஒன்றியம், கண்டி சமூக நிர்வாகத்தின் ஒன்றியங்கள் இணைந்து நுவரெலியா, பதுளை, கண்டி போன்ற பகுதிகளிலிருந்து வருகை தந்தவர்கள் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் என இன மத கட்சி பேதமின்றி நுவரெலியாவில் ஒன்றுகூடியவர்கள் சர்வதேச நீதி தினத்தில் தமது கோரிக்கை அடங்கிய வசனங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர். மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொதுவாக தமிழர்களை இந்திய தமிழர்கள் எனக் கூறுகின்றனர் நாட்டில் மலையகம் 200 என பல இடங்களில் பல கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இருந்தும் இன்று வரை இலங்கைத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் என யாரும் கூறுவதில்லை. எனவே இன்று முதலாவது தமிழர்களாகிய எங்களை இலங்கைத் தமிழர்கள் மலையக தமிழர்கள் என அடையாளப்படுத்த வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தனர். அத்துடன், ஒரே தடவையில் 1,300 புதிய வீடுகள் அமைப்பதற்கான 'பாரத் - லங்கா வீடமைப்பு' திட்டம் இந்தியாவின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதிலும் மலையகம் மக்களுக்கும் எவ்விதமான பாரபட்சமின்றி வீடுகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இதன் போது முன்வைத்தனர்.

அத்துடன் மலையக மக்கள் குடியேறி 200 வருடங்ளாகிவிட்டது. எங்களுக்கு உரிமை இல்லையென்று ஒப்பாரி வைக்கமாட்டோம். எமது மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் பல வழிகளில் போராடுவோம் எனக் கூறினர. .(05)

# எமது பிள்ளைகளை காணாமலாக்க செய்தோர் அழிந்துபோய் நாடு கடத்தப்படுதல் வேண்டும்!





எமது பிள்ளைகளை காணாமல் ஆக்க செய்தவர்கள் அழிந்து நாடு கடத்தப்பட வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தேங்காய் உடைத்து வேண்டுதல் மேற்கொண்டனர்.

கிளிநொச்சியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற போராட்டத்தின் நிறைவிலேயே இவ்வாறு வேண்டுதலில் ஈடுபட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது நீதி கோரிய போராட்டம் 10.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆம்பமானது.

தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் கடந்த நிலையில் நீதி கோரி கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த போராட்டம் டிப்போ சந்தி நோக்கி ஏ 9 வீதி ஊடாகப் பயணிக்க ஆரம்பித்தது. இந்தப் போராட்டத்தில் சமயத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன், சிங்கள மக்களும் கலந்து கொண்டனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் 3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 4 (இ) உறுப்புரையை மீறுவதுடன் 2ஃ3 பெரும்பான்மையுடனும் மக்கள் ஆணையின் போது அவை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

83 (7) ஆம் வாசகம் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவ்வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அவ் இணங்காமை நீங்கும்.

மேலும், உயர்நீதிமன்றத்தினால் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்குஇணங்கமாத்திரம் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலம் சட்டமாக நிறைவேற்ற முடியுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்றார்.

## நுண்நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20(3)(ஒ), 20(3)(ஓ), 3(இ) ஆம் வாசகங்களுடன் வாசிக்க வேண்டிய 20(3)(ஞ), 20(3)(ட), 20(4)(இ), 32(1), 60, 76 மற்றும் 84 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், நாடாளுமன்றத்தில் விசேடபெரும்பான்மையுடன்அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அவ் இணங்காமை நீங்கும்.

39(2) மற்றும் 60 ஆம் வாசகங்கள் அரசமைப்பின் 3 மற்றும் 4 ஆம் உறுப்புரைகளுடன் வாசிக்க வேண்டிய 76 ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்யுடன் அவை நிறைவேற்றப்பட வேண்டும் அத்தோடு 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மக்கள் ஆணையின் போது மக்களினால் அங்கிகரிக்கப்படுதலும் வேண்டும். எனினும், அவ்வாசகங்கள்தொடர்பில் உயர்நீதிமன்றத்தின்தீர்ப்பின்மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால்அவ்இணங்காமை நீங்கும்.

65 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 14(அ) ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அவ் இணங்காமை நீங்கும்.

அதன் பிரகாரம், உயர்நீதிமன்றத்தினால் முன்மொழிந்துள்ள திருத்தங்கள், குழுநிலையின் போது மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இந்தச் சட்டம் அல்லது அதன் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணங்கும் என உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பினை சமர்ப்பித்துள்ளது.

## 5 சட்டங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்), ஸ்ரீ பாலாபிவூர்த்தி வர்தன சங்கம் (கூட்டிணைத்தல்), சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) மற்றும் தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலங்களில் சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்டிருப்பதாகப் பிரதி சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

## ஓய்வூதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வூதியர்களின் கொடுப்பனவு முரண்பாடுகள் எப்போது தீர்க்கப்படும்? ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் 2,500 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு தற்போது பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் அரச துறையில் ஓய்வூதியத்தின் சம்பள செலவு கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு தொடர்பில் அடுத்த 10 வருடங்களுக்கு முன்வைக்கப்பட்ட கணிப்புகள் என்ன?

தொடர்ச்சியான ஓய்வூதிய அதிகரிப்பை அரசால் தாங்க முடியாது என பல கருத்துக்கள் நிலவி வரும் நிலையில், நிலையான ஓய்வூதிய நலன்களை வழங்குவதற்காக அரசு மேற்கொண்டுள்ள பகுப்பாய்வு மற்றும் வேலைத்திட்டம் என்ன?

விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம் இன்று முற்றிலுமாக வீழ்ச்சியடைந்துள்ளது, எனவே இதனைச் செயல்படுத்தவேண்டும் மீனவர் ஓய்வூதியம் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும், அது நிலையாகப் பேணப்படவேண்டும்.

தொடர்பில்லாதஓய்வூதியநிதிகள் அல்லது சமூகப் பாதுகாப்புப் பயன்களைவழங்கும்முறையைவிடசகல நபரையும் உள்ளடக்கும் வகையில் சமூகபாதுகாப்புவேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்றார்

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# சாளம்பைக்குளம் றவ்ழத்துள் ஜன்னா பாலர் பாடசாலையின் விடுகை விழா!





வவுனியா, புதிய சாளம்பைக்குளம், றவ்ழத்துள் ஜன்னா பாலர் பாடசாலையின் விடுகை விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கிவைத்தார்.

அத்துடன், கட்சியின் பிரதித் தவிசாளர் முத்து முகம்மட் ஆசிரியர், வவுனியா மாவட்ட உலமா சபைத் தலைவர் ஜ/னைட் மௌலவி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் றஹீம், விவாகப் பதிவாளர் ஜவாஹிர் மற்றும் நிஹ்மதுல்லாஹ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உட்பட நால்வர் மத்ரஸா மாணவன் மர்மச் சாவு குறித்து கைது

(பாறுக் ஷிஹான்)

மாணவனின் மர்ம மரணம் தொடர்பிலான சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உட்பட 4 சந்தேக நபர்களை கல்முனை நீதிமன்ற கட்டளைக கமைய சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.




குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மௌலவியின் வேண்டுகோளிற்கமைய சிசிடிவி காணொளிகளை அழித்தவர்களை இனங்கண்டு கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்று (செவ்வாய்க்கிழமை) சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உள்ளிட்ட 4 பேர் வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் ரவூப் தலைமையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அட்டாளைச்சேனை சாய்ந்தமருது பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் 30, 26, 22, 23 வயது மதிக்கத்தக்கவர்கள் ஆவர்.

அத்துடன் கைதான 4 சந்தேக நபர்களையும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் இன்று (புதன்கிழமை) ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த நீதிமன்ற தவணையின் போது விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் அழிக்கப்பட்ட காணொளிகளை மீள பெற்றுக்கொள்ள மொரட்டுவை கணனி பிரிவிற்கு வன்பொருளை அனுப்பி வைக்குமாறு கட்டளை பிறப்பித்திருந்ததுடன் நீண்ட சமர்ப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# பொலிஸாரால் தேடப்பட்ட சந்தேக நபர் கைதானார்!

மோதரை, லேல்லம பிரதேசத்தில் நபரொருவரைக் கடந்த 16 ஆம் திகதி கொலை செய்ய முயற்சித்த பிரதான சந்தேக நபர் கடவத்தை, மங்கட பகுதியில் 10 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இராணுவத்தில் கடமையாற்றியவர் என்பது விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான வெல்லே சாரங்கவின் சகா எனத் தெரியவந்துள்ளது.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இந்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05)

# விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பில் யாழில் கலந்தாய்வு!

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதியுடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடினர்.

பலாலி இராணுவ தலைமையலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி எம்சிபி விக்ரமசிங்கவை யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட குழுவினர் சந்தித்து பேசினர். குறித்த சந்திப்பில் ஜனாதிபதியின் வடமாகாண மேலதிக செயலாளர் இளங்கோவன் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகங்கா சுதீஸ்னர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (05)

# இந்தியாவில் பட்டம் பெற்றபின் வேலைக்காக காத்திருப்போருடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்பி வேலைவாய்ப்புகள் இல்லாது சிரமப்படும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். குறித்த சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித துள்ள இந்த மாணவர்கள் அரசாங்க வேலை கிடைப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களது ஆவணங்களை கியுஎவ்எவ்ஆர் அமைப்பின் உதவியுடன் ஒழுங்குபடுத்த ஆலோசனைகளை ஆளுநர் வழங்கியுள்ளதுடன், திருப்பி அனுப்பப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் தலா 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார். (05)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் யாழ். சிவில் சமுகத்தினருடன் சந்திப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் வடக்கு மாகாணத்தில் உள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை நேற்று (செவ்வாய்க கிழமை) சந்தித்து கலந்துடையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள திருமறை கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் , வலிந்து கானாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம், கடற்றொழில் அமைப்புக்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் தமக்கு எந்தவிதமான நம்பிக்கையும் ஏற்படவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (05)

# உள்நாட்டு பாரம்பரியம் மற்றும் நலனை ஊக்குவித்து புதிய சாம்பிராணி வகையை சூரியா அறிமுகம் செய்துள்ளது




40 வருட கால வரலாற்றைக் கொண்ட சன் மெச் நிறுவனத்தின் வர்த்தக நாமமான சூரியா, தனது புதிய தயாரிப்பான சூரியா சாம்பிராணியை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. வளியை தூய்மைப்படுத்துவதற்காக, எதிர்மறை சக்தியை அகற்றுவதற்கும் நலனை மேம்படுத்துவதற்கும் மருத்துவ குணநலன்கள் நிறைந்த துகள்களை எறிக்கும் பாரம்பரியத்தை தொடரும் வகையில் இந்த தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.



இந்த அறிமுக நிகழ்வு அண்மையில் கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சி-



ரேஷ்ட பிரதிநிதிகள், வர்த்தக நாம தூதுவரான சின்னத்திரை நட்சத்திரம் யசோதா விமலதர்ம ஆகியோர் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்ததுடன், சூரியா விநியோகத்தர்களுடன் தொடர்புகளை பேணியிருந்தனர்.

சன் மெச் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியுமான கௌரி ராஜன் கருத்துத் தெரிவிக்கையில், “40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கையை வென்ற நாமம் எனும் வகையில், நவீன கால குடும்பத்தாருக்கும் இந்த பாரம்பரிய நலன்பேணும் செயன்முறையை இலகுவாக தொடர்வதற்கு நாம் விரும்பியதுடன், புதிய வாடிக்கையாளர்களுக்கும் அறிமுகம் செய்ய எதிர்பார்த்தோம். எமது புதிய சாம்பிராணி தெரிவுகள் அனைவராலும் ஆன்மீகத்தையும் சுகாதார அனுகூலங்களையும் அனுபவிக்க உதவுவதுடன், தினசரி செயற்பாடுகளுடன் பாரம்பரி யத்தை ஒன்றிணைக்கச் செய்வதற்கான சூரியாவின் அர்ப்பணிப்புக்கமைய அமைந்துள்ளது. சமூகத்தின் கலாசார மற்றும் ஆன்மீக செயன்முறைகளுடன் தொடர்புபட்ட வகையில் தரமான தயாரிப்புகளை வழங்குவதற்கான வர்த்தக நாமத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக சூரியா சாம்பிராணி அறிமுகம் அமைந்துள்ளது.” என்றார்.

இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் உள்ளக அங்கமாக சாம்பிராணி அமைந்துள்ளதுடன், ஓய்வையும், அமைதியையும் ஊக்குவிக்கும் இனிய சூழலை உருவாக்கும் அதன் தன்மைக்காக பெரிதும் அறியப்படுகின்றது. மேலும், சாம்பிராணியிலிருந்து எழும் நறுமணப் புகையானது நுளம்புகள், பூச்சிகள், பக்டீரியா மற்றும் சில வைரஸ்கள் ஆகிய வற்றை இல்லாமல் செய்யும் திறன் கொண்டது. பவுடர் மற்றும் சௌகரியமான கப் தெரிவுகளில் சூரியா சாம்பிராணி கிடைப்பதுடன், நீண்ட நேரம் நிலைத்திருக்கும் இனிய ரோசா நறுமணத்தை கொண்டதாக, சந்தையில் காணப்படும் ஏனைய சாம்பிராணி தயாரிப்புகளிலிருந்து மாறுபட்டு, ஆன்மீக உணர்வு, அமைதி மற்றும் புலன்செலுத்தலை தூண்டுவதாக அமைந்திருக்கும்.

யசோதா விமலதர்ம கருத்துத் தெரிவிக்கையில், “சூரியா சாம்பிராணி அறிமுக நிகழ்வில் நான் பிரசன்னமாகியிருப்பதையிட்டு மிகவும் பெருமை கொள்கின்றேன். இலங்கை கலாசாரத்தின் பாரம்பரிய நறுமணத்தை பிரதிபலிப்பதுடன், சமூகங்களை ஒன்றிணைக்கும் வகையிலும் அமைந்துள்ளது. உயர் தரத்திலான சூரியா சாம்பிராணி சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், ஒவ்வொரு தருணத்திலும் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. தினசரி அனுஷ்ட்டானங்களில் இதனைப் பயன்படுத்தி தூய்மையையும் வரையறையற்ற பாரம்பரியத்தை மேம்படுத்துமாறும் அனைவரையும் அழைக்கின்றேன்.” என்றார்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட சாம்பிராணி பயன்படுத்த இலகுவான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலக்கரி அல்லது சிரட்டையை எரித்து தயாரிக்க வேண்டிய பாரம்பரிய முறைமையை இல்லாமல் செய்துள்ளதுடன்,




இது அதிகளவு நேரத்தை எடுத்துக் கொள்வதுடன், அசௌகரியமான காரியமாகவும் அமைந்துள்ளது. வேலைப்பளு நிறைந்த நபர்களுக்கு கலாசார மற்றும் சமய அனுஷ்ட்டானங்களில் நேரத்தை விரயம் செய்யாமல் ஈடுபடுவதற்கு உதவும் வகையில் இந்தத் தயாரிப்பு அமைந்துள்ளது. இயற்கை சேர்மானங்கள் மற்றும் சிகிச்சைசார் மூலிகை உள்ளம்சங்களைக் கொண்ட தயாரிப்புகளில் நுகர்வோரின் கவனத்தை உறுதியாக கவரும் வகையில் சூரியா சாம்பிராணி அமைந்திருக்கும் என்பதில் நிறுவனம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இறை வழிபாடுகளிலும், சமய ஆன்மீக அனுஷ்ட்டானங்களிலும் குடும்பத்தார் ஈடுபடும் இக்காலப்பகுதியில் சூரியா சம்பிராணி அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாமி விளக்குகளை சூரியா நெருப்புக்குச்சிகள் கொண்டு ஒளியூட்டுவது, ஊதுபத்திகளைக் கொண்டு பகுதிகளை நறுமணமூட்டி மங்கலகரமாக்குவது அல்லது மெழுகுவர்த்திகளைக் கொண்ட இனிய சூழலை உருவாக்குவது போன்ற சூரியா வர்த்தக நாமத்தின் மீது வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் தமது நம்பிக்கையை பேணி வரும் நிலையில், தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சாம பிராணி தெரிவினூடாக வாடிக்கையாளர்களுக கும் வர்த்தக நாமத்துக்குமிடையே காணப்படும் பிணைப்பு மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சாம்பிராணி தெரிவினால் இந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சித்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகத்தாரின் சிறந்த தெரிவாகவும் அமைந்துள்ளது.

# உயரடுக்கு சிங்கள ......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

விஜய குமாரணதுங்கவைக் கைது செய்தார் ஜே.ஆர். விஜேவீரவின் கட்சி தடைசெய்யப்பட்டது. விஜேவீர காட்டில் அடைக்கப்பட்டார். சிறீமாவோ மற்றும் அனுர பண்டாரநாயக்க ஆகியோர் பிரேமதாசவையும் குடும்பத்தினரையும் அதிகம் தாக்கினர். சிறீமாவோ அநுரவையும் விஜய குமாரணதுங்கவையும் கட்சியிலிருந்து நீக்கினார். 1971 இல் சிறீமாவோ விஜேவீரவை சிறையில் அடைத்தார். 1988 இல், ஜே.வி.பி உடனான கூட்டணி நிபந்தனைகளை நிராகரித்தார்.

ஆனால் பிரேமதாசாவோ, விஜேவீரவோ அல்லது விஜய ரணதுங்கவோ தங்களுக்கான அச்சுறுத்தல் என்பது மேல்தட்டு வர்க்கத்தினரிடமிருந்து என்பதை புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் வர்க்கத் தலைவர்களை எதிரிகளாகப் பார்த்தார்கள். உயரதிகாரிகளும் அதையே விரும்பினர். விஜேவீர விஜய குமாரணதுங்கவை எதிரியாகப் பார்த்தார். விஜயா, விஜயவீரவை எதிரியாகப் பார்த்தார். விஜயா விஜேவீரவால் கொல்லப்பட்டார். விஜயவீர பிரேமதாசாவால் கொல்லப்பட்டார். இறுதியாக, யூ.என்.பி. மேல்தட்டு வர்க்கமும் சிறீமாவோவும் ஒன்றுபட்டு பிரேமதாசாவை பதிவிலியிருந்து இறக்கத் திட்டம் போட்டனர். அதற்கிடையில் பிரேமதாச கொல்லப்படடார்.

பிரேமதாசாவைக் கொன்றது வடக்கில் தலைவனாக இருந்த பிரபாகரன்தான். பிரேமதாச, விஜயா மற்றும் விஜேவீரவைப் போலவே பிரபாகரனும் வடக்கில் உயரடுக்கு வர்க்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்த ஒரு தேர்ந்த தலைவர். இந்த நான்கு பேரும் சமூகத்தின் உயரடுக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தாதவர்கள்.

வரலாற்றில் அதே நிகழ்வு இன்று வேறு விதமாக நடக்கிறது. இரண்டு உயரடுக்கு தலைவர்களுக்கு இடையிலான சண்டையை உயரடுக்கு வர்க்கம் பயங்கரமாகப் பார்க்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பிரேரணைகள் ஜனாதிபதி ரணில் முன்வைக்கிறார்.

பிரேமதாச, விஜேவீர, விஜயா போன்று சஜித்தும் அநுரவும் தமது உண்மையான எதிரி யார் என்பதை அறியவில்லை. சஜித் தனது எதிரி அனுரா என்று நினைக்கிறார். தனது எதிரி சஜித் என்று அனுர நினைக்கிறார். ஆனால் இவர்கள் இருவருக்கும் எதிரி மேல்தட்டு வர்க்கம்.

1988 ஆம் ஆண்டு ஜேவிபி பயங்கரவாதம் மேல்தட்டு வர்க்கத்தை வாயடைக்க வைத்தது போல், 2022 ஆம் ஆண்டு நடந்த போராட்டம் மேல்தட்டு வர்க்கத்தை தனது இரு கால்களாலும் தூக்கி தரையில் தள்ளிவிட்டது. 1988 இல் உயரடுக்கு வர்க்கம் வலுவிழந்த போது உயர்தரமற்ற ஜனாதிபதி ஒருவர் வந்தார். இம்முறை மேல்தட்டு வர்க்கம் தலைநிமிர்ந்து நிற்கும் போதும் எலைட் அல்லாத ஜனாதிபதி வரவேண்டும்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களின்பேரணிதொடங்கியது. இந்திய துணைத் தூதரகத்தை நோக்கி அது நகர்ந்து சென்றபோது இடையில் பொலிஸாரால் மறிக்கப்பட்டது.பின்னர்கடற்றொழில் அமைப்புக்களை சேர்ந்த 8 நபர்கள் மாத்திரம் இந்திய துணைத் தூதரகத்துக்குள் சென்று மனு வழங்க அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கைக் கடலுக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்தும்படி வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் முற்றுகையிடப்படும் என யாழ் மாவட்டகடற்றொழில்அமைப்புக்கள் பெப்ரவரு 18 அறிவித்திருந்தன.

இதனால்நேற்றுக்காலைமுதல் இந்திய துணைத் தூதரகத்தை சுற்றி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரும்நிறுத்தப்பட்டு பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டிருந்தது.

துணைத் தூதரகம் முன் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள், பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் அமைச்சரின் அலுவலகத்திற்கும் சென்று மனுக் கையளித்துள்ளனர்.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டிருகிறது. இந்தச் சம்பளம் அதிகரிப்பை எப்படி வழங்க முடியும்.

மக்களின் இடுப்புப்பட்டியை இறுக்கிக்கொள்ளுமாறும் காரியாலயங்களில் ஆளணியை குறைக்குமாறும் முழு நாட்டுக்கும் ஆலாசேனை வழங்கியது இவர்கள்தான். ஆனால் மத்திய வங்கியின் பிரதி ஆளுநரின் சம்பளம் 7 லட்சத்து 12ஆயிரம் வரை அதிகரித்திருக்கிறது. இது முறையா எனக் கேட்கிறேன்.

அதேபோன்று அலுவலக உதவியாளர்களின் சம்பளத்தை 75 ஆயிரம் ரூபாயாக அதிககரித்துக்கொண்டிருக்கிறது. அவ்வாறு பலரது பெயர் பட்டியல் இருக்கிறது. இவ்வாறு சம்பளம் அதிகரித்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் கண்களை மறைத்து செயற்பட்டுள்ளனர்.

அத்துடன் மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பை கணக்கிட்டுக்கொள்ள அவர்களுக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. ஆனால்அதற்குநாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும். என்றாலும் தறபோதைய அதிகரிப்புக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை.

அதனால் இந்த சம்பள அதிகரிப்பு சட்டவிராதேமாகும். இதனை தடுக்காவிட்டால், எதிர்காலத்தில் நாங்கள் அந்த பணத்தை அவர்களிடமிருந்து மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் நாடு வங்குராதே;து அடைவதை மறைத்த இவர்கள் இந்த பொறுப்பில் இருந்து தப்ப முடியாது. அவ்வாறு இருக்கும்போது எவ்வாறு இவர்களுக்கு சம்பளம் அதிகரிக்க முடியும்.

அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று அரச சுகாதார துறையினர் கோரும் 35ஆயிரம் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும்மத்தியவங்கிஅதிகாரிகள் தங்களுக்குத் தேவையான முறையில் சம்பளத்தை அதிகரித்துககொண்டிருப்பதுபோல், அவர்களுக்குத் தேவையான முறையில் அவர்களின் ஓய்வூதியத்தையும் அமைத்துக்கொள்ள முடியும்.

அப்படியானால், நாடு வங்குரோத்து அடைந்தமைக்குப் பொறுப்புகூறவேண்டும்என உயர் நிதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நபர்களில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ. டி, லக்ஷ்மன், நிவார்ட் கப்ரால் மற்றும்நிதி அமைச்சின்செயலாளர் ஆட்டிகல ஆகியோருக்கும் இந்த நன்மை வழங்கப்படப்போகிறதா என கேட்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டபோதே அமைச்சர் பந்துல இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை என்பது அமெரிக்காவின் பிராந்தியமல்ல. எமது நாடு இறையாண்மையுடைய சுயாதீன நாடாகும். எனவே எமது நாட்டுக்குள் அரசியலமைப்பு சபையில் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமை சட்டத்தை தயாரிக்கும் நிறுவனமான நாடாளுமன்றத்துக்கே உரியது.

அதற்கமைய இது தொடர்பான திருத்தங்கள் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டன. அவை நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தை நாட முடியும். நீதிமன்றம் அவை தொடர்பில் பரிசீலனை செய்து, திருத்தங்களைப் பரிந்துரைக்கும்.

சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு தேவையும் ஆளும் தரப்புக்குக் கிடையாது. எவ்வாறிருப்பினும் இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான தேவை அரசுக்கு காணப்படுகிறது.

தனிநபர் பாதிப்பு உள்ளிட்டவற்றை தவிர்ப்பதே இந்த சட்ட மூலத்தின் நோக்கமாகும். எனவே எந்தவொரு பிரஜைக்கும் சமூக வலைத்தளத்தின் ஊடாக தத்தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை என்றார்.

## வரவுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியின் மூலம் மீன் விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச கடற்றொழில் சட்டமூலம் தொடர்பில் மீனவத் தொழிற்சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி, திருத்தங்களைச் செய்து, அதனைப் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

உரிய சட்டத்தின் மூலம் மீனவ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என உறுதியளிக்கிறோம். வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்பிடிக்காக இலங்கைக்கு வருவதற்கு இதன்மூலம் வழி ஏற்படும் என்று தெரிவிக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை.

மீன்பிடித் தொழிலின் வளர்ச்சிக்காக தனியார் துறை முதலீடுகளை எதிர்பார்த்துள்ளோம். மேலும், வெளிநாட்டு முதலீடுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் துறையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் மீன்வளர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகிறன.

அதிகரித்துவரும் கடல் வெப்பம் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தலால், உலகில் மீன்வளம் குறைந்து வருகிறது. தற்போது நாடளாவிய ரீதியில் நீர்வாழ் விலங்குகளின் உணவுக்காக இறால், நண்டு வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்க்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நீர்கொழும்பு மீனவர்களின் மீன்சந்தை விவகாரத்திற்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும். நீர்கொழும்பு மீனவர்கள் கார்டினல் அவர்களின் வாசஸ்தலத்திற்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பில் அறியக்கிடைத்தது. அது கத்தோலிக்க திருச்சபைக்கும் மீனவர்களுக்குமான பிரச்சினை. இருந்த போதிலும், அது குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எங்களுக்கு நேரடியாக அந்த விடயத்தில் சம்பந்தம் இல்லாவிட்டாலும் கடற்றொழில் மக்கள் என்ற வகையில் ஒரு தார்மீகப் பொறுப்பு எனக்கும் இருக்கிறது. அந்த வகையில் அங்கு நேரடியாகச் சென்று, சம்பந்தப்பட்ட தரப்புகளைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி ஒரு சுமூகமான, நீதியான தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# தொண்டமான் தொழில் பயிற்சிக் கல்லூரியில் மாணவர்களை உள்ளீர்க்கும் பிரதான நிகழ்வு







இன்றைய நவீன உலகை வெல்வதற்கு கல்வியும், தொழில்நுட்ப கல்வியும் எவ்வளவு முக்கியமோ அதேபோல பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும், தமக்கான தொழில் பாதையை நிர்ணயித்துக்கொள்வதற்கும் தொழில் கல்வி என்பது மிக முக்கியமாகும்.

எனவே, இங்கு வந்துள்ள அனைத்து மாணவர்களும் தமது தொழில் கல்வியை முறையாக பயின்று, இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். ஹற்றனில் உள்ள தொண்டமான் தொழில் பயிற்சிக் கல்லூரியில் முன்னெடுக்கப்படும் தொழிற்பயிற்சிகளுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் பிரதான நிகழ்வு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில், இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனின் பங்கேற்புடன் நேற்று(செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்றத்தின் சிரேஷ்ட முகாமையாளர் தேசபந்து வீ.ஜீவனந்தராஜா, நிலையத்தின் அதிபர் கெப்ரியல், பொலிஸ் அதிகாரிகள், அமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பில் இருந்து நிகழ்நிலை ஊடாக மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், புதிய மாணவர்களை வரவேற்றதுடன், அவர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

மலையக இளைஞர்களை தொழில்ரீதியாக பலப்படுத்தவும், அதன்மூலம் வாழ்க்கையில் அவர்கள் அடுத்தகட்டம் நோக்கி பயணித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்ற உயரிய நோக்கிலுமே இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை சிறந்த முறையில் தொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இங்கு பயின்ற பலர் சமூகத்தில் இன்று சிறந்த நிலையில் இருந்து, எமது சமூகத்துக்கும் பங்களிப்பு வழங்குவதை காணமுடிகின்றது. இதையே நாம் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

புத்தகக் கல்வியைப்போன்றே அனுபவக் கல்வியும், பயிற்சிக் கல்வியும் முக்கியம். ஆக கிடைத்துள்ள இந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் அனைவரினதும் கல்வி நடவடிக்கையும், எதிர்காலமும் சிறப்பாக அமைய வாழ்த்துகள். - எனவும் அமைச்சர் கூறினார். (05)

# கிழக்கு மாகாண சபையோடு இணைந்து ஜம்போரியை நடத்துகின்றமை மகிழ்ச்சி

## திருமலை மாவட்டச் செயலர் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரியை கிழக்கு மாகாண சபையோடு இணைந்து நடத்த கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாகவும் ஜம்போரியை சிறப்பாக நடத்தத் தேவையான ஒத்துழைப்புக்கள் உயர்ந்த மட்டத்தில் வழங்கப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்டச் செயலர் சாமிந்த ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஜம்போரி நடைபெறவுள்ளதுடன் கலந்து கொள்ளும் சாரண தலைவர்களுக்கு தேவையான வசதிகளை பல நிறுவனங்கள் இணைந்தும் வழங்கி வருகின்றன.

தற்போது சாரணர்கள் தமக்கான கூடாரங்களை அமைத்து வருகின்றனர். தேசிய சர்வதேச அடிப்படையில் 11500 இற்கு மேற்பட்ட சாரணர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

சுகாதாரம், பாதுகாப்பு, குடிநீர் உட்பட பல வசதிவாய்ப்புக்கள் தடங்கலின்றி வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சாரணர்களுக்கான விசேட வைத்திய வசதி பிரிவொன்றும் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்து கொள்கிறார்.

சிறீ கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நடைபெறும். இன்று முதல் ஜம்போரியை பொது மக்கள் பார்வையிட முடியும்.

ஜனாதிபதியின் வருகை மற்றும் ஜம்போரியை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (05)

# கல்முனை வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடை மற்றும் நூல் விநியோகம்







(பாறுக் ஷிஹான்)

கல்முனை வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடை மற்றும் இலவச நூல் விநியோக நிகழ்வு நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரது பங்கேற்புடன் நடைபெற வேண்டுமென்ற கல்வியமைச்சின் பணிப்புரைக்கமைய கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கல்முனைத் தொகுதி அபிவிருத்திக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் மாணவர்களது கலை நிகழ்வுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயத்திலுள்ள கல்முனை முஸ்லிம் மற்றும் கல்முனை தமிழ் கோட்டங்களைச் சேர்ந்த 31 பாடசாலை மாணவர்களுக்கு இந்த விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன் போது பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப் பணிப்பாளர்கள், அதிபர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)

# புலிகளின் தங்க வேட்டை தோல்வி 2 நாள்களாக ஒன்றும் கிட்டவில்லை

முல்லைத்தீவு, கிளிநொச்சி வீதியில் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குப்பட்ட குமாரசாமிபுரம் கிராம அலுவலகர் பிரிவில் றெப்பானா சந்திக்கு அருகில் உள்ள காணியில் அரைக்கும் ஆலை அமைந்துள்ள கட்டடத்திறகுள்ளும், அந்த காணிக்குள்ளும் விடுதலைப்புலிகள் தங்கம் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இரண்டாவது நாளாக நேற்றும் (செவ்வாய்க்கிழமை) தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் எதுவும் கிடைக்காத நிலையில் அகழ்வு பணிகள் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த காணியில் ஏற்கனவே சிலர் சட்டவிரோதமான முறையில் தோண்ட முற்பட்டு தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த காணியில் பரல் கணக்கில் விடுதலைப்புலிகள் தங்கத்தைப் புதைத்து வைத்துள்ளதாக நம்பத்தகுத்த நபர் ஒருவர் தெரிவித்த கருத்திற்கு அமைய தர்மபுரம் பொலிஸாரால் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டு தோண்டும் நடவடிக்கைகள் திங்கட்கிழமையும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் எதுவும் கிடைக்காத நிலையில் அகழ்ந்த இடங்களை மூட பணிக்கப்பட்டுள்ளது.

அரைக்கும் ஆலையின் கட்டடத்திற்குள் ஒருபகுதி சுமார் 6 அடிக்கு மேல் தோண்டப்பட்ட போதும் எதுவும் கிடைக்கவில்லை இதனை விட காணியின் பின்பக்கத்தில் இரு இடங்களில் கனரக இயந்திரம் கொண்டு நிலத்தில் சுமார் 10 அடிவரை தோண்டப்பட்ட போதும் எதுவும் காணாத நிலையில் குறித்த பகுதிகளை மூட பணிக்கப்பட்டுள்ளது.

இந்த தோண்டும் நடவடிக்கைக்காக காணியைச் சுற்றி பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2024இல் வெளியிடப்பெற்றது.